DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C.191/17 P.W. 4

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. சுப்ரமணியன் | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **12.09.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of **12.09.2018**

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூர் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். மளிகை கடை வைத்துள்ளேன். எனக்கு அசா.1 விஜயா மற்றும் அசா2. பன்னீர்செல்வம் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் சனிக்கிழமை எங்கள் ஊர் மாட்டு சந்தையில் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த சண்டை யார் யாருக்கு இடையே நடந்ததென்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

எனது மளிகை கடை அசா.1 வீட்டிற்கு எதிர்புறமாக உள்ளது என்றால் சரிதான். என் கடையில் இருந்து பார்த்தால் அசா.1ன் வீட்டின் மேல்புறம் தெரியும். கடை உள்புறமாக இருந்து பார்த்தால் அந்த வீடு தெரியாது. எனது கடைக்கும் அசா.1ன் வீட்டிற்கு இடையே எந்த கட்டிடமும் இல்லை. ஆஜர் எதிரிகள் எனக்கு பங்காளி உறவுமுறைகள் என்றால் சரிதான். 11.09.10 அன்று மதியம் 11.45 மணியளவில் நான் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது எதிரிகள் கடப்பாரை மற்றும் ஆயுதங்களை கையில் வைத்துக்கொண்டு ஓடினார்கள் என்றும் விஜயாவின் அலரல் சத்தம் கேட்டு நான் அவரின் வீட்டிற்கு சென்று பார்த்ததாகவும் அங்கு பன்னீர்செல்வம் அடிப்பட்டு மயக்கமாகி கிடந்தார் என்றும் நான் அங்கிருந்தவர்களை கேட்டபோது ஆஜர் எதிரிகள்தான் கடப்பாரை மற்றும் இதர ஆயுதங்களால் பன்னீர்செல்வத்தின் தலையில் அடித்ததாக என்னிடம் சொன்னார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு



நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுகொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C.191/17 P.W. 5

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. பாலு | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **12.09.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of **12.09.2018**

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூர் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டிவருகிறேன். எதிரிகளுக்கும் அசா.1 குடும்பத்திற்கும் இடையில் பிரச்சனை இருந்துவந்தது. அவர்களுக்கு இடையே பிரச்சனை நடந்ததாக கேள்விப்பட்டேன். பிரச்சனையை நான் பார்க்கவில்லை. சில வருடங்களுக்கு முன்பு 9வது மாதம் 12ந் தேதி போலிசார் எங்கள் ஊர் சந்தை அருகில் என்னை விசாரணை செய்தார்கள். இந்த வழக்கு சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். போலிசார் வேறு எதுவும் அங்கு செய்வில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். சம்பவம் இந்த இடத்தில்தான் நடந்ததா என்று கேட்டு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். பார்வை மகசரில் உள்ள கையெழுத்து அதசாஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசுதரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

12.09.2010 அன்று எதிரிக்கும் அசா.1 குடும்பத்திற்கும் தகராறு நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த சம்பவம் சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்து போலிசார் என் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. போலிசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும் தற்போது அதை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.